# வரலாறு பாட அடைவு மேம்பாட்டுச் செயற்றிட்டம் - 2020

## உயர்மட்ட வினா – விடைத் தொகுப்பு

# தரம் 10

ஆக்கம் :- நா.செல்வச்சந்திரன்
யா/அராலி இந்துக் கல்லூரி
0779356158

# அலகு 01

# வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

01 **இலங்கையின் வரலாற்றைக் கூறுவதில் மகாவம்சம் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் எவை?**

1 வரலாறு விரிவாக எழுதப்பட்டுள்ளமை.

2 இதில் இலங்கை வரலாறு தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளதோடு இலங்கையின் வரலாறு ஒரே நூலிலேயே உள்ளடக்கப்பட்டுள்ளது.

3 இந்நூலில் உள்ள தகவல்கள் கல்வெட்டுக்கள் மூலமும், ஏனைய தொல்பொருள் மூலாதாரங்கள் மூலமும் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றமை.

**02 இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் எவை?**

- நூல் எழுதப்பட்ட காலம்
- நூல் ஆசிரியர்
- நூலாசிரியரின் நோக்கம்
- நூலுக்கான தகவல் திரட்டப்பட்ட விதம்

**03 இலக்கிய மூலாதாரங்களால் ஏற்படும் நன்மைகள் எவை?**

1 வரலாற்றுக்கால ஒழுங்கு முறையை வளர்த்துக்கொள்ள முடியும்

1 ஒரு நாட்டின் வெளிநாட்டு உறவுகள் பற்றி அறிய முடியும்

3 ஒரு நூலில் கூறப்பட்டுள்ள விடயங்களை மற்றொரு நூலின் மூலம் உறுதிப்படுத்தலாம்.

4 வெவ்வேறு காலகட்டங்களின் அரசியல், பொருளாதார, சமூகம், கலாசாரம் பற்றி அறியலாம்

**04 கல்வெட்டுக்களால் ஏற்படும் நன்மைகள் எவை?**

1 ஒரு மொழியின் படிப்படியான வளர்ச்சியை அறிந்து கொள்ளலாம்.

2 மன்னர்களின் சேவைகளை அறிந்து கொள்ளலாம்.

3 புராதனகால பொருளாதார முறைகளை அறிந்து கொள்ள முடியும்.

4 இலக்கிய மூலாதாரங்களில் கூறப்பட்டவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

5 கற்குகைகளை பௌத்தபிக்குமாரின் வசிப்பிடங்களாக வசதிசெய்து கையளித்தமை பற்றிக் கூறுகின்றது.(அமைத்தவர்களின் பதவி, பரம்பரை)

6 புராதன சமூக வரலாறு, குடியேற்றங்களின் பரம்பல் என்பவற்றை அறியலாம்.

**05 நாணயங்கள் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய விடயங்கள்**

1 நாட்டின் பொருளாதார நிலை

2 நாட்டின் உலோகப்பாவனை

3 நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம்

4 தொழினுட்ப வளர்ச்சி

5 ஆட்சி செய்த மன்னர்களின் அதிகார விரிவாக்கம்

## 06 புராதனகால சிதைவுகளிலிருந்து எவற்றை அறிந்து கொள்ளலாம்

1 முற்கால மக்களின் கலையாக்கம், கலையாற்றல்

2 தொழில்நுட்ப அறிவு

3 கட்டடக்கலைத்திறன்

4 நீர் முகாமைத்துவம்

5 சுற்றாடல் பாதுகாப்பு

## 07 கலைப்படைப்புக்களின் ஊடாக எவற்றை அறிந்து கொள்ளலாம்

1 முன்னோர்களின் ஆடை, அணிகலன்கள், ஆபரண வகைகளை அறிந்து கொள்ளலாம்.

2 கலையாற்றல்களை அறியலாம்.

3 கலையாக்கங்களில் பயன்படுத்தப்பட்ட பாறைவகைகளை அறியலாம்

4 சமய நம்பிக்கைகள் பற்றி அறியலாம்.

## 08 தொல்பொருள் மூலாதாரங்கள் மூலம் அறிந்துகொள்ளக்கூடிய விடயங்கள்

1 பண்டைய மக்களின் பல்வேறுபட்ட திறமைகள்

2 பண்டைய கலாசாரம்

3 தொழினுட்பம்

4 வெளிநாட்டுத் தொடர்புகள்

5 வாழ்க்கை முறை

## 09 தொல்பொருள் மூலாதாரங்களின் முக்கியத்துவங்கள் எவை?

1 தொல்பொருள் மூலாதாரங்கள் வரலாற்று நிகழ்வுகளின் சமகாலத்தவையாக விளங்குகின்றன

2 இலக்கிய மூலாதாரங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை திருத்திக்கொள்ள உதவும்.

3 தொல்பொருள் மூலாதாரங்கள் நம்பகத்தன்மை வாய்ந்ததாக காணப்படும்.

4 தொல்பொருள் மூலாதாரம் மூலம் பெறப்படும் கட்டட சிதைவுகள், சின்னங்கள், சிதைவுகள், கலையம்சங்கள் முதலானவை வரலாற்றுக்கு உறுதியையும் பலத்தையும் அளிக்கின்றன.

## 10 வரலாற்றைக் கற்பதால் ஏற்படும் நன்மைகள் எவை?

1 இறந்தகால அனுபவங்கள் மூலம் நிகழ்காலத்தை அறிந்து கொள்ளவும் எதிர்காலத்தை திட்டமிடவும் உதவும்

2 மாற்றுக் கலாசாரத்தை மதிக்கும் தன்மை ஏற்படும்

3 தான் வாழும் சமுகம் பற்றியும் உலகம் பற்றியும் புரிந்துணர்வு ஏற்படும்.

4 நாட்டின் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

5 மனிதத்தன்மையை மதிப்பதன் மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தலாம்.

6 வேறுபட்ட கருத்துக்களை சகித்துக்கொள்ளல்.

## 11 தொல்பொருள் மூலாதாரங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியங்கள் எவை?

1 தொல்பொருள் மூலாதாரங்களை முன்னோர்கள் பாதுகாத்ததன் காரணமாகவே நமக்கு உதவுகின்றன. அது போன்று நாமும் பாதுகாப்பதன் மூலமே எதிர்கால சந்ததிக்கு உதவு முடியும்

2 இன்று மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களால் தொல்பொருள் மூலாதாரங்கள் உள்ள இடங்கள் மறைந்து போக வாய்ப்புக்கள் உள்ளன.

3 உல்லாசப் பயணத்துறையால் தொல்பொருட்கள் சேதமாக்கப்படுகின்றன.

4 தற்காலத்தில் மேற்கொள்ளப்படும் சுரங்கமறுத்தல், புதையல் தோண்டுதல் காரணமாக தொல்பொருள் மூலாதாரங்கள் அழிவடைந்து வருகின்றமை

5 வரலாற்றுச் சிறப்புடைய இடங்களில் அல்லது தொல்பொருள் சின்னங்களின் மீது எழுதுதல், வரைதல் செயற்பாடுகளால் பாதிப்பு ஏற்படலாம்.

## 12 தொல்பொருள் மூலாதாரங்களைப் பாதுகாக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எவை?

1 மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்

2 தொல்பொருள் மூலாதாரங்களை சேதப்படுத்துவதற்கு எதிராக சட்டங்களைக் கொண்டு வரல்

3 உல்லாசப் பயணிகளுக்கு போதிய அறிவுறுத்தல்களை வழங்குதல்

4 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் போது தொல்லியல் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுதல்

# அலகு 02

# இலங்கையில் குடியேற்றங்கள் தாபிக்கப்படுதல்

**01 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய ஆதாரங்கள் கிடைத்துள்ள இரு இடங்களைக் குறிப்பிட்டு அவை பற்றிக் குறிப்பிடுக?**

- இரத்தினபுரியும் அதன் அயற்சூழல் பிரதேசங்களும்
- இரணைமடுப் படிமங்கள்

**02 வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் குடியிருப்புக்களின் அடிப்படை இயல்புகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக?**

1 இயற்கை வளங்கள் ஏராளமாகக் கிடைக்கும் இடங்களில் வாழ்ந்தமை.

2 வெவ்வேறான காலங்களில் வெவ்வெறான இடங்களில் வாழ்ந்தமை.

**03 வரலாற்றிற்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கை முறையின் இயல்புகள் எவை?**

1 இடம்பெயரும் வேட்டைக்காரர்களாக இருந்தமை – வேட்டையாடியும், அலைந்து திரிந்தும் உணவைத் தேடினர். தினமும் 7 கிலோமீற்றர் வரை நடந்துள்ளனர்.

2 மழைக்காலங்களில் கற்குகைளில் தங்கினர்.

3 வரண்ட காலப்பகுதிகளில் வெட்டவெளிகளில் தங்கினர்

4 சிறிய சமுகக் குழுக்களாக வாழ்ந்தனர்.

5 இறந்துபோன ஒறவினர்களின் சடலங்களை கற்குகைளில் புதைத்தள்ளனர்.

**04 வரலாற்றிற்கு முற்பட்ட கால மனிதனின் உணவுப்பழக்க வழக்க முறைகள் எவை?**

1 தான் வாழும் சூழலுக்கு ஏற்ப உணவுப்பழக்கத்தைக் கொண்டிருந்தமை

2 வேட்டையாடி தமக்கு தேவையான உணவைப் பெற்றனர்.

3 தாவர உணவுகளையும் உட்கொண்டமை

4 உணவைப்பதப்படுத்த தீயைப் பயன்படுத்தியமை.

5 உப்பைப் பயன்படுத்தியுள்ளனர

6 தாழ்நில ஈரவலய நீர்நிலைகளில் வளர்ந்த தித்தயா போன்ற மீனினங்களை உண்டனர்.

**06 வரலாற்றிற்கு முற்பட்ட கால மனிதனின் தொழினுட்ப முறைகள் எவை?**

1 கேத்திர கணிதப் பொறிமுறை உருவிலான நுணுக்கமான கல்லாயுதங்கள் உருவாக்கப்பட்டிருந்தமை.

2 நன்கு கூர்மைப்படத்தப்பட்ட இச்சிறிய கல்லாயுதம் தடி ஒன்றினால் அல்லது மிருக எலும்பு ஒன்றுடன் கட்டிப் பாவிக்கப்பட்டது.

3 பல்வேறு தேவைகளுக்கு உபகரணங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

4 ஆபரணங்களைப் பயண்படுத்தியமை

5 கருங்கல்லில் தட்டையான சுத்தியல், அம்மி போன்றவற்றையும் பயன்படுத்தியுள்ளன்.

## 07 வரலாற்றிற்கு முற்பட்ட கால மனிதனின் உடலமைப்பின் இயல்புகள் எவை?

1 வளர்ந்த ஆணின் உயரம் 174 சென்ரிமீற்றரும், பெண்ணின் உயரம் 166 சென்ரிமீற்றரும் ஆகும்.

2 அவர்களது பற்கள் பெரியனவாக அமைந்திருந்தன.

3 அகன்ற மூக்கையும் அகன்ற நாடியையும் கொண்டிருந்தனர்.

4 வளர்ந்த ஆணின் மூளை 1600 கனசென்ரிமீற்றரும், பெண்ணின் மூளை 920 கனசென்ரிமீற்றருமாகும்.

6 அவர்களது ஆயுட்காலம் 35 – 40 வயதுக்கு இடைப்பட்டதாகக் காணப்பட்டது.

## 08 வரலாற்றிற்கு முற்பட்ட கால மனிதனின் சடங்கு, சம்பிரதாய முறைகள் எவை?

1 இறந்துபோன உறவுகளின் உடல்களை கற்குகைளில் புதைத்தனர்.

2 உடல்கள் உக்கிப்போன பின்னர் அதைத்தோண்டி மீண்டும் எடுத்து பாதுகாப்பாக புதைத்துள்ளனர்.

3 மரணித்தவர்களின் மண்டையோட்டையும், எலும்பையும் செந்நிறப்பாறையினால் நிறம் தீட்டினர்.

4 இறந்தவர்களுக்கு மரணச்சடங்கு நடத்தினார்கள்.

## 09 முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

1 முறையான மரணச்சடங்குகளின் ஆரம்பம்.

2 சுடப்பட்ட மண்பாவனையின் ஆரம்பம். (இவை இரண்டும் பிரதான இடம் பெறும்)

3 இரும்புப் பாவனையின் ஆரம்பம் இதனால் இரும்பு யுகம் எனப்பட்டது.

4 நிலையான குடியிருப்புக்கள் ஆமைக்கப்பட்டமை

5 விவசாயம் செய்ய ஆரம்பித்தமை

## 10 முன்வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் இயல்புகள் எவை?

- ✓ நிரந்தரமான குடியேற்றங்களும் வாழிடங்களும் உருவாக்கப்பட்டமை. (விவசாயத்துக்கு பழக்கப்பட்டமையே அதற்கான காரணமாகும் - இதற்கு தெளிவான ஆதாரமாக உடரஞ்சமாடத்தில் வீட்டின் எச்சம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வீட்டின் இயல்புகள்
  - வரிச்சுச்சுவர் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.
  - வீட்டின் உட்புறம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
  - வீட்டிற்கு கதவுகளையும் பயன்படுத்தினர்
  - சுவர் களிமண்ணால் கட்டப்பட்டிருந்தது.
  - கூரை இலுக்குப்புல்லால் மேயப்பட்டிருந்தது.
  - வீடு 10.20 X 6.80 சதர மீற்றர் அளவுடையதும். செவ்வக வடிவம் கொண்டதுமாகும்.

## 11 முன் வரலாற்றுக்கால மக்களின் வாழ்க்கைமுறையின் இயல்புகள்

- ✓ உடரஞ்சாமட வீட்டிலிருந்து உடைந்த மட்பாண்டத் துண்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
- ✓ வாழ்க்கை ஓர் ஒழுங்கான தன்மையில் கட்டியெழுப்பப்பட்டது.
- ✓ உணவு உற்பத்தியில் அதாவது கமத்தொழிலில் கவனஞ் செலுத்தினர்.
- ✓ கற்களினால் செய்யப்பட்ட சமையலறை உபகரணங்களும், இரும்பினால் செய்யப்பட்ட உபகரணங்களும் கிடைத்துள்ளன. அவற்றுள் அதிகமானவை கல்லாயுதங்கள் ஆகும்.
- ✓ பெண்கள் தம்மை அலங்கரித்துக்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர

## 12 முன்வரலாற்றுக்கால மரணச்சடங்கு முறையின் இயல்புகள் எவை?

- ✓ அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம்
- ✓ பரணி மயானங்கள்
- ✓ களிமண் ஓட மயானம்

## 13 முன்வரலாற்றுக்கால தொழினுப்பப் பயன்பாட்டின் இயல்புகளை விளக்குக?

- ✓ உலோகப் பயன்பாடு இடம்பெற்றது
- ✓ நிறந்தீட்டப்பட்ட மட்பாண்ட துண்டுகள் கிடைக்கப்பெற்றமையானது அக்கால மக்களின் வனைதல்நுட்பம், கலைநுட்பம் என்பவற்றைக் காட்டுகின்றது.
- ✓ தொழினுட்ப முறையிலான வீடுகள் அமைக்கும் முறை பின்பற்றப்பட்டமை.
- ✓ மண்ணால் செய்யப்பட்ட மணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை.
- ✓ பூதவுடல்களைத் தகனம் செய்து அஸ்தியை மட்பாண்டங்களில் இட்டுவைத்தல்

## 14 வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய பௌதீகக் காரணிகள் எவை?

1 மழைவீழ்ச்சியின் அளவு

2 மண்ணின் தன்மை

7 இயற்கை வளங்களின் பரம்பல்

8 தரைத்தோற்ற வேறுபாடு

9 நீரோடைகள்

## 15 வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் இயல்புகளை விளக்குக?

1 குளத்தை மையமாகக் கொண்டு கிராமங்கள் வளர்ச்சியடைந்திருந்தன.

2 ஒரு கிராமம் மற்றைய கிராமத்திலிருந்து காடுகளால் பிரிக்கப்பட்டும் காணப்பட்டமை.

3 தொழில் அடிப்படையில் ஒன்றுபட்டிருந்த கிராமங்கள் காணப்பட்டமை.

4 செயற்பாடுகளின் அடிப்படையில் அமைந்த கிராமங்கள் காணப்பட்டமை.

5 கிராமங்கள் பல்வேறு அளவுகளில் காணப்பட்டுள்ளமை.

10 பெரிய நகரக் குடியிருப்புக்கள் காணப்பட்டமை

7 கிராமங்கள் வேலியிட்டுப் பாதுகாக்கப்பட்டமை

## 11 வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் நிர்வாக ஒழுங்கமைப்பைக் குறிப்பிடுக.

1 கிராமம் என்பது சில குடும்பங்களைக் கொண்ட அலகாகும்.

2 குடும்பம் என்பது கிராமத்தின் முக்கியம் வாய்ந்த அலகாகும்.

3 குடும்பத்தைப் பிரதிநித்துவப்படுத்துபவன் குடும்பத் தலைவன் ஆவான். பிராமிக் கல்வெட்டுக்களில் அவன் கஹபதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளான்.

4 கிராமத்தில் குடும்பத்தலைவர்களைக் கொண்ட குழுவின் தலைவன் கமிக அல்லது கிராமிக என அழைக்கப்பட்டான். அதாவது கிராமத் தலைவன்

5 பிரதேசங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 10 கிராமத்தலைவர்களைக் கொண்ட குழு செயற்பட்டது.

# அலகு 03

# இலங்கையில் அரசியல் அதிகார வளர்ச்சி

## 01 இல்லத்தலைவனின் கடமைகள் எவை?

1 தன் குடும்பத்தவரது தேவைகளை நிறைவேற்றுதல்

2 தன் குடும்ப உறுப்பினர்களை பகைவரிடத்தில் இருந்தும் விலங்குகளிலிருந்தும் காத்தல்

3 குடும்பத்தில் ஒற்றுமையை நிலைநாட்டுதல்

4 குடும்ப அங்கத்தவர்களது ஒழுக்கத்தை பாதுகாத்தல்

6 சமய வளர்ச்சியில் பங்காற்றுதல்

## 02 கிராமத்தலைவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் எவை?

1 சொத்து, பலம் என்பவற்றைக் கொண்டவராக இருத்தல்

2 குழுவின் அங்கத்தவர்களது நம்பிக்கையைப் பெற்றவராக இருத்தல்

## 03 கமிகவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் எவை?

1 கிராமப்பொது நிகழ்வுகளுக்கு தலைமை தாங்குதல்

2 கிராமக்குளத்தை நிர்வகித்தல், நீரை விநியோகித்தல்

3 கிராமத்தவர்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல்

4 கிராமத்தில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல்

5சமய வளர்ச்சியில் பங்குகொள்ளுதல்

6 சமாதான சகவாழ்வு நிலவுவதற்கு உதவி செய்தல்.

## 04 பருமகவிடம் காணப்பட்ட அதிகாரங்கள் (கடமைகள்) எவை?

1 வரி அறவிடும் அதிகாரம்

2 எல்லா கமிகமாரையும் நெறிப்படுத்துதல்

3 குளத்தொகுதி நீர் பங்கிடப்படும் முறை

4 கிராமங்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்

5 கிராமங்களின் பொது நிகழ்வுகளுக்கு தலைமை தாங்குதல்

## 05 பண்டுகாபயன் இலங்கையின் முதல் மன்னன் எனக் கொள்ளப்படுவதற்கான காரணங்கள் எவை?

1 பிராந்திய அதிகாரிகளாக இருந்த மாமன்மார்களைக்கொன்று பிராந்திய ரீதியில் பிரிக்கப்பட்டிருந்த அதிகாரங்களை ஒருமுகப்படுத்தினான்.

2 தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அனுராதபரத்தை தெரிவு செய்தான்

3 தான் ஆட்சிக்கு வந்து பத்தாவது ஆண்டில் நாட்டிலுள்ள கிராமங்களுக்கு எல்லைகளை வகுத்தான்.

## 06 தேவநம்பியதீச மன்னன் காலத்தில் மத்திய மயப்படுத்தப்பட்ட நிர்வாகம் மேலும் சிறப்படைந்தமைக்கான காரணங்கள்

1 சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை.

2 அரச அதிகாரத்தின் சின்னமாக சத்திரிய குல முறைப்படி முடிசூட்டுவிழாவை நடத்தினான்.

3 இவனது காலத்தில் மகிந்ததேரரால் பௌத்த மதம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

4 பிக்குகள் சாசனம் உருவாக்கப்பட்டமை.

5 பிக்குணிகள் சாசனம் உருவாக்கப்பட்டமை

6 பிக்குணி சங்கமித்தையால் வெள்ளரசுக்கிளை கொண்டு வரப்பட்டு மகாமேகவனப்பூங்காவில் நடப்பட்டது.

7 நாட்டு மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் தூபராமவையும் திஸாவாவியையும் கட்டினான்.

## 07 பாதிகாபய மன்னன் காலத்தில் மத்திய நிர்வாகம் சிறப்பாக இருந்தமையின் வெளிப்பாடுகள் எவை?

1 வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்து இருந்தது

2 உரோமுக்கு வர்த்தக தூதுக்குழுவை அனுப்பினான

3 உரோமுடன் நெருங்கிய தொடர்பு இருந்தமைக்குச் சான்றாக மாதோட்டத்திலும், சிகிரியாவிலும் உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

4 ருவன்வெலிசாயவுக்கு மாபெரும் பூஜை ஒன்றை நிகழ்த்திய இவனது உருவச்சிலை ருவன்வெலிசாய முற்றத்தில் உள்ளது.

## 08 புராதன கால மக்கள் அரசனிடம் எதிர்பார்த்த சேவைகள் எவை?

1 நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றுதல்.

2 நாட்டு மக்களை பாதுகாத்தல். வெளிநாட்டு, உள்நாட்டு எதிரிகளின் இடையூறுகளில் இருந்து மக்களைப் பாதுகாத்தல்.

3 மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு உதவுதல்.

## 09 இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களுள் துட்டகைமுனு மன்னன் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள்

அரசியல் பணி

1 எல்லாள மன்னனிடம் இருந்து நாட்டை மீட்டு ஒன்றுபடுத்தியமை

2 பிராந்திய அதிகாரங்களை ஒன்றிணைத்தமை

சமூகப்பணி

1 மக்கள் நலனோம்பு திட்டங்களை மேற்கொண்டான்.

2 சமய வளர்ச்சிக்குப் பங்காற்றியமை

பொருளாதாரப் பணி

1 தீகவாவி பிரதேசத்தை அபிவிருத்தி செய்தமை.

## 10 நாட்டின் நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்காக வசப மன்னன் ஆற்றிய பங்களிப்புக்கள்

அரசியல் பணி

1 புதிய அரச வம்சத்தைத் தோற்றுவித்தான்.

2 நாட்டினை நிர்வாக அலகுகளாகப் பிரித்து ஆட்சி புரிந்தான்.

பொருளாதாரப் பணி

1 நீர்ப்பாசன விருத்திக்குப் பங்காற்றினான்.

2 வரி அறவிடும் முறையை அறிமுகப்படுத்தினான்.

சமயப்பணி

1 பழுதடைந்த விகாரைகள் பலவற்றை புனர் நிர்மாணம் செய்தான்.

2 தூபராம தூபிக்கு வட்டதாகேமனை அமைத்தான்.

3 பிக்குமார்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு விகாரைகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றி கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.

4 இசுறுமுனிய விகாரையில் போயாமனையொன்றைக் கட்டினான்.

## 11 இலங்கை அரசின் அதிகாரம் பலமடைவதற்கு 1ம் விஜயபாகு மன்னன் மேற்கொண்ட முயற்சிகள்

அரசியல் பணி

1 இலங்கையில் இடம்பெற்ற சோழராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தமை.

2 பொலநறுவைவையை தலைநகராக்கியமை.

3 வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக்காக்க முயற்சி எடுத்தமை.

பொருளாதாரப் பணி

1 மஹாகல்கடவலவாவி, மஹாகணதராவவாவி முதலிய தூர்ந்துபோன குளங்களை புனரமைத்தான்.

2 எலஹாரக் கால்வாயின் ஒருபகுதியை புனரமைத்தான்.

3 கந்தளாய்வாவி, கவுடுலுவாவி, மின்னேரியா ஆகிய குளப்பகுதிகளில் மீண்டும் விவசாயத்தை ஆரம்பித்தான்.

4 ஊவா மாகாணத்தில் புதுகுணவாவியை அமைத்தான்.

சமயப்பணி

1 மகாவிகாரை, அபயகிரிவிகாரை, ஜெத்தவனராமவிகாரை, திஸ்ஸராமவிகாரை போன்ற விகாரைகளை புனர் நிர்மாணம் செய்தான்.

2 பொலனறுவையில் 3 மாடிகளைக் கொண்ட தலதாமாளிகையை அமைத்தான்.

3 சிவனொளிபாதலைக்குச் செல்லும் பாதையை செப்பனிட்டு தங்குமிட வசதிகளை ஏற்படுத்தினான்.

4 பௌத்த கல்வியை வளர்க்க பிரிவேனாக்களை அமைத்தான்.

5 சிவனொளிபாதமலையின் நிர்வாகச் செலவுக்காக கிரிமலை என்ற கிராமத்தை ஒதுக்கியமை

# அலகு 04

## பண்டைய சமூகம்

**01 முற்காலத்தில் நிர்வாகத்துறையைச் சேர்ந்தவர்கள் சுகாதாரத்துறையை முன்னேற்றுவதில் ஆர்வம் காட்டியுள்ளனர். அதற்குப் பணியாற்றிய மன்னர்களைக் குறிப்பிட்டு விளக்குக.**

1 புத்ததாசன்

2 5ம மகிந்தன்

3 4ம் காசியப்பன்

4 1ம் உபதிஸ்ஸ

5 பண்டுகாபயன்

6 1ம் பராக்கிரமபாகு

**02 புராதனகால மக்களது பொருளாதாரத்தின் அடிப்படைகள் எவை?**

1 சீவனோபாயமாக விவசாயம் காணப்பட்டது

2 மந்தை வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டது

3 பல்வேறு கைத்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

4 உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் இடம்பெற்றுள்ளது

5 பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக பல்வேறு கலைஞர்கள் இருந்துள்ளனர்.

**03 புராதன கால சேனைப்பயிர்ச்செய்கை தொடர்பான இயல்புகள் எவை?**

1 தமக்குத் தேவையான உணவினைப் பெற்றுக்கொள்வதற்காக போதுமான காட்டினைத் தெரிவு செய்து அதனைத் தீயிட்டுக்கொழுத்தி மேற்கொள்ளும் பயிர்ச்செய்கையாகும்.

2 சேனைப்பயிர்ச்செய்கையைக் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தமை.

3 பல்வேறு படிமுறைகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை

4 பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளமை.

5 சேனைப்பயிர்ச்செய்கை தொடர்பான சொற்கள் காணப்பட்டுள்ளமை.

6 சேனைப்பயிர்ச்செய்கை தொடர்பான பாதுகாப்பு முறைகள் இருந்தமை.

7 சேனைப்பயிர்ச்செய்கை தொடர்பான உபகரணங்கள் காணப்பட்டுள்ளமை.

7 சேனைப்பயிர்ச்செய்கை தொடரட்பான வரிகள் காணப்பட்டுள்ளமை.

**04 புராதனகால நெற்செய்கையின் பிரதான அம்சங்கள் எவை?**

1 அதரிகரித்த சனத்தொகையின் உணவுத்தேவையை நிறைவு செய்யவே வயல்களில் நெல் விதைக்கப்பட்டது.

2 சிறிய நெல்வயல்கள் "வயல்கள்" என்றும் பரந்த வயல்கள் "கெத" என்றும் அழைக்கப்பட்டன.

3 பெரும்பாலும் நீர்ப்பாசனத்தின் மூலமே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. மழை காலத்தில் குளங்களில் சேகரிக்கப்பட்ட நீர் கால்வாய்கள் மூலம் வயல்களுகது விநியோகிக்கப்பட்டது.

4 ஒரு முறை பயிரிடப்படும் காலம் போகம் எனப்படும். இரண்டு காலங்களில் பயிரிடப்பட்டது இவை பெரும்போகம், சிறுபோகம் என்பவையாகும். நீர் கிடைக்கும் தன்மையைப் பொறுத்து இடைப்போகமும் மேற்கொள்ளப்பட்டது. தோணிகல கல்வெட்டில் மூன்று போகங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

5 உலர் வலயத்தின் நீர்த்தேவைகைள நிறைவு செய்வதற்கு இரு முறைகள் பயன்படுத்தப்பட்டன அவை மழைநீரைத் தேக்கிவைப்பதும், ஆறுகளை மறித்து கால்வாய்கள் மூலம் நீரை வயல்களுக்கு அனுப்புவதுமாகும்.

6 வசபன், மகாசேனன், பராக்கிரமபாகு, தாதுசேனன் போன்ற பல மன்னர்கள் நீர்ப்பாசன விருத்திக்குப் பங்காற்றினர். பராக்கிரமபாகு மன்னன் " விண்ணில் இருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்டாது கடலில் கலக்கவிடமாட்டேன்" எனக்கூறியுள்ளமை முன்மாதிரியான செயற்பாடாகும்.

**05 புராதனகால மந்தை வளர்ப்பின் முக்கிய அம்சங்கள் எவை?**

1 மாடு, ஆடு, கோழி என்பன வளர்க்கப்பட்டன இதில் மாடு முக்கியம் பெற்றுள்ளது.

2 மாடு வளர்ப்போருக்காக ஒதுக்கப்பட்ட கோபாலகம் பற்றி கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

3 உணவுத்தேவையை இவற்றின் மூலம் பெற்றனர். தயிர், நெய், வெண்ணெய் என்பன முக்கியம் பெற்றன.

4 4ம் காசியப்ப மன்னனின் கல்வெட்டில் கூறப்படும் கிரிகெரி என்னும் சொல்லானது பால் பெற்றுக்கொள்ளும் பசுவைக் குறிப்பதாக உள்ளது.

5 பெண்ணொருத்தி பால் கறப்பதனைக் காண்பிக்கும் சிற்பம் சிகிரியாவில் அமைந்துள்ள நாகப்பா எனக் குறிப்பிடப்படும் விகாரையில் உள்ள தாதுகாப்பத்தில் வைக்கப்பட்டுள்ள மகாமேருக்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. .

6 பொலநறுவை மெதிரிகிரியில் உள்ள எத்வெஹர மண்டபத்தில் வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைக்காக ஆடுகளினதும் கோழிகளினதும் மாமிசம் பயன்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 06 புராதன காலத்தில் இடம்பெற்ற கைத்தொழில்களைக் குறிப்பிட்டு விளக்குக.

1 உலோகக்கைத்தொழில்

2 ஆபரணக்கைத்தொழில்

3 தந்தச்செதுக்கல் கைத்தொழில்

4 வனைதல் கைத்தொழில்

5 நெசவுக் கைத்தொழில்

## 07 உள்நாட்டு வர்த்தகத்தின் முக்கிய இயல்புகள் எவை?

1 அனுராதபுரம், மாகம என்பன வர்த்தகர்கள் வாழ்ந்த நகரங்களாக இருந்துள்ளன.

2 அனுராதபுர நகரத்தின் தெற்கு வாயிலின் அருகில் காலசுமண என்ற பெயரில் வர்த்தக சந்தை ஒன்று இருந்துள்ளது.

3 சிகரியாவின் நீர்ப்பூங்காவில் காணப்படும் கல்டிவட்டில் ''அபலவபர'' என்ற வர்த்தகர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவர் புளி வியாபாரத்தில் ஈடுபட்டவுர் ஆவார்.(ஆம்ல என்பது புளி)

3 அக்காலத்தில் நிலவிய வர்த்தக சங்கத்தைக் குறிப்பதற்கு ''புகய'' என்றும் ''நியமஸ்தான'' எனவும் கூறப்பட்டுள்ளது.

4 வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் ''வணிஜ'' எனவும் ''வாபர'' எனவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

5 வர்த்தகர்கள் செல்வந்தர்களாக விளங்கினர். அவர்களால் கற்குகைகள் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

6. மாகமவில் இருந்து அனுராதபுரத்திற்கு வந்த சுரநிமல என்பவர் வாசனைத் திரவியங்களை வாங்கியதாக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

7 வர்த்தகம் தொடர்பான சட்ட திட்டங்கள் காணப்பட்டுள்ளமை. 4ம் உதய மன்னனின் சொரபொரவாவிக் கல்வெட்டில் ஹோபிடிகம வர்த்தக சந்தையின் நிர்வாக நடவடிக்கைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

## 08 புரதான காலத்தில் இடம்பெற்ற வெளிநாட்டு வர்த்தகத்தின் இயல்புகள் எவை?

1 இலங்கையில் 11ம் நூற்றாண்டில் இருந்து 13ம் நூற்றாண்டு வரை தென்னிந்திய வம்சாவளிகளின் வர்த்தக நிறுவனங்கள் பற்றி தமிழ் நூல்கள் கூறுகின்றன.

2 வெளிநாட்டு வர்த்தகர்கள் அனுராதபுர ஆரம்ப காலங்களில் வாழ்ந்துள்ளனர்.

3 வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளுக்கு முக்கிய காரணியாக இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமையே காரணமாகும்.

4 இலங்கையில் பல துறைமுகங்களும் காணப்பட்டுள்ளமை வெளிநாட்டு வர்த்தகத்திற்கு பெரிதும் உதவியது.

5 வெளிநாட்டு வர்த்தகத்தின் முக்கிய பொருட்களாக யானை, யானைத்தந்தம், முத்து, மாணிக்கம், கடலாமை என்பன காணப்பட்டுள்ளன.

6 உரோம், சீனா, கிரேக்கம், இந்தியா, அரேபியா போன்ற நாடுகளோடு வர்த்தகத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**09 புராதன காலத்தில் நிலவிய ஏனைய தொழில் புரியும் கலைஞர்கள் பற்றிய விடயங்கள் எவை?**

1 ஆசிரியர்கள்கள்

2 வைத்தியர்கள்

3 வழக்கறிஞர்கள்

4 நடனக்கலைஞர்

5 சித்திரக்கலைஞர்

7 கவிஞர்கள்

**10 புராதன காலத்தில் நிலவிய சமயங்களைக் குறிப்பிட்டு அவற்றின் இயல்புகளைக் குறிப்பிடுக?**

1 பௌத்த மதம்

2 இந்துமதம்

3 கிறிஸ்தவம்
4 இஸ்லாம்

**11 புராதன கால கல்வி முறையின் சிறப்பியல்புகள் எவை?**

1 ஆரம்ப காலத்தில் பயிற்சிகளின் மூலமும் கேள்வி ஞானத்தின் மூலமுமே ஒரு பரம்பரையிலிருந்து அடுத்த பரம்பரைக்கு அறிவு கைமாற்றப்பட்டது.

2 4400 ஆண்டுகளுக்கு முன்பே மயானங்களில் களிமண் ஓடக்கல்லறைகளும், அஸ்திவைக்கப்பட்டுள்ள மட்பாண்டங்களும் காணப்பட்டுள்ளமையைக் கொண்டு அவற்றை உருவாக்குவதற்குரிய தொழினுட்ப அறிவு இருந்திருத்தல் வேண்டும்.

3 புராதனகாலக் கல்வெட்டுக்களில் ஆசிரியர்கள் "ஆசார்ய" என்னும் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

4 புத்தசமயம் பரவத்தொடங்கிய பின்னர் கல்வியின் மத்திய நிலையங்களாக விகாரைகள் விளங்கின.

5 அனுராதபுரக்காலத்தில் மகாவிகாரை சமய மத்திய நிலையமாக மட்டுமன்றி கல்வியின் மத்திய நிலையமாகவும் விளங்கியது.

6 கல்வி வாழ்க்கைக்கு அவசியமானது எனக் கூறப்பட்டுள்ளது.

7 மகாவிகாரை, அபயகிரிவிகாரை என்பவற்றில் பிரிவெனாக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**12 புராதன காலத்தில் இலக்கியமும் இரசனையும் எவ்வாறு காணப்பட்டது என்பதைக் குறிப்பிடுக?**

1 இராசரட்டை நாகரிக இலக்கியங்கள் பின்வரும் மொழிகளில் எழுந்தன.

2 2000 வருடங்களுக்கு முற்பட்ட தாளத்துடன் பாடக்கூடிய கவிதையொன்று கிரிந்த பன்னசாலையிலுள்ள கற்பாறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

2 சிகிரியாவின் பளிங்குச் சுவர்களில் 600 மேற்பட்ட இரசனை மிக்க கவிதைகள் காணப்படுகின்றன.

3 புராதனகால கவிஞர்களின் கவிதைகளில் பௌத்தமதப் போதனைகளும் உலகின் நிலையாமையும் முக்கிய கருப்பொருட்களாகக் காணப்பட்டன.

4 அபயகிரிவிகாரையின் சுற்றாடலில் உள்ளத்தைக் கவரக்சுடிய உவமைக்கவிதையொன்று பொறிக்கப்பட்டுள்ளது.

5 அக்கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்துள்ளனர்.

6 சிகிரியாக்குன்றில் தீட்டப்பட்ட அப்சரஸ்களின் மூலம் 5ம் நூற்றாண்டின் இலங்கையின் அரசவைக் கலையம்சத்தைக்காட்டுகின்றன.

**13 புராதன சமுகத்தில் வாழந்த இனங்கள் இணக்கப்பாட்டுத்தன்மையுடன் வாழ்ந்தனர் என்பதற்குக் கூறக்கூடிய ஆதாரங்கள் எவை?**

1 புராதன காலத்திலிருந்தே இலங்கையில் பல இனத்தவர்கள் வாழ்ந்துள்ளனர்.

2 பௌத்த சமயக்குருவாக இருந்த தமிழர் பற்றி கி.மு 250ம் ஆண்டளவில் எழுதப்பட்ட கல்வெட்டொன்று அபயகிரி விகாரையில் காணப்பட்டுள்ளது.

3 தமிழர் ஒருவரை திருமணம் முடித்த சிங்களப்பெண் பற்றிக் அம்பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4 அனுராதபுரத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த வீதி ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

5 கி.பி 9ம் நூற்றாண்டாகும் போது அரசசபையில் தமிழ்மக்களின் நலன்களைப் பாதுகாக்க தமிழ் அதிகாரி ஒருவர் இருந்துள்ளார்.

6 இளநாக, அபயநாக போன்ற மன்னர்கள் தென்னிந்தியாவிடம் படையுதவி பெற்றுள்ளார்கள்.

7 லீலாவதி அரசி கால கல்வெட்டொன்றில் நானதேசி என்னும் வர்த்தகப்பிரிவினருக்கு சொந்தமான தீர்வை நிலையம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

8 இலங்கையில் உள்ள சிவனொளிபாதமலை அனைத்து இன மக்களாலும் வழிபடப்படும் இடமாக உள்ளது.

9 அனைத்து மக்களும் தமது கலாசாரங்களை மதித்துப் பாதுகாத்த அதேவேளை நாட்டின் முன்னேற்றத்திற்கே முக்கியமளித்துள்ளனர்.

# அலகு 05

## இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்

**01 முன்வரலாற்றுக்கால மனிதனின் விஞ்ஞான தொழினுட்பப் பயன்பாட்டை அவன் மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

1 களிமண் ஓடக்கல்லறைகள்

2 வீடமைப்புத் தொழினுட்பம்

3 மட்பாண்டம் தயாரித்தல்

**02 பின்வரும் குளத்தின் கூறுகளை அவற்றின் அமைப்பு, பணி என்பவற்றை விளக்குக.**

1 குளக்கட்டு

2 மடைக்கதவு

3 கலிங்கற்றொட்டி

4 அலைதாங்கி

5 வெளிவான்கதவு(சுருங்கை)

**03 சிகிரியா நீர்ப்பூங்காவில் பயன்படுத்தப்பட்டுள்ள தொழினுட்பங்கள் எவை?**

1 600அடி உயரத்திலிருந்து வாய்க்கால் ஒன்றின் மூலம் சமவெளியை நோக்கி ஓடும் நீரைத் திடீரெனத் தடுத்து கணிசமான அமுக்கத்தைக் கொடுப்பதன் மூலம் நீரை மேலெழச் செய்வதாகும்.

2 அவ்வாறு ஏற்படும் இடங்களில் வட்டமான துளைகளிடப்பட்ட கருங்கற்களைப் பொருத்துவதன் மூலம் கவர்ச்சியான முறையில் நீரை மேலெழுப்பலாகும்.

3 வெவ்வேறு அளவிலான துளைகள் இடப்பட்டுள்ளன. சிறிய துவாரத்தின் ஊடாக வெளியேறும் நீர் உயரமாகவும் பெரிய துவாரகம் ஊடாக வரும் நீர் குறைந்த உயரத்திற்கும் மேலெழும்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**04 நீரோட்டம் கீழ்நோக்கிச் செல்லும் போது வண்டல் படிவதற்காக அமைக்கப்பட்ட தொழினுட்பங்கள் எவை?**

1 வாய்க்காலின் சாய்வு குறைவாக அமைக்கக்கடல்

2 வாய்க்கால் சுருள் வடிவில் அமைக்கப்படல்

3 மழைகாலத்தில் படியும் சேற்றை நீக்குவதற்காக கருங்கற்பாறைத்துண்டுகள் அமைக்கப்பட்டன.

**05 ருவன்வெலிசாயவின் கட்டட அமைப்பில் பயன்படுத்தப்பட்ட தொழினுட்பப் பிரயோகங்கள் எவை?**

1 அத்திவாராம் அமைக்க நிலம் 10.5 அடி ஆழமாக்கப்பட்டது.

2 அக்குழிக்குள் சுண்ணாம்புக்கற்பாறைகள் போடப்பட்டு பலம் வாய்ந்த மனிதர்களால் உடைக்கப்பட்டது.

3 பின்னர் நீர் ஊற்றி யானைகளின் காலில் கடின தோலினால் செய்யப்பட்ட பாதணிகள் அணிவிக்கப்பட்டு மிதித்து மட்டமாக்கப்பட்டது.

4 பின்னர் வெண்ணெய்க்களிமண் இடப்பட்டு உறுதியாக்கப்பட்டது.

5 அடுத்து அதன் மேல் கருங்கல் படையொன்று இடப்பட்டது.

6 இதன் மேல் சரளைக்கல் படையொன்று இடப்பட்டது

7 அதன்மேல் படிகக்கல் படையொன்று இடப்பட்டது

8 பின்னர் அதன்மேல் நவநீதம் என்னம் களிமண் பூசப்பட்டது

9 பின்பு இரசாயனத் திரவமொன்றின் மூலம் கரைக்கப்பட்ட விளாம்பழச்சாறு பூசிய உலோகவலையொன்று விரிக்கப்பட்டது.

10 அதன்மேல் நல்லெண்ணெயில் நனைக்கப்பட்ட ரன்சிரியல் எனப்படும் கற்கள் பரப்பப்பட்டன.

**06 பண்டுகாபயனால் அமைக்கப்பட்ட நகர நிர்மாணத்தின் இயல்புகள் எவை?**

1 நகரத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டது.

2 நகரின் பாதுகாப்பிற்காக சுற்றிவர அகழிகள் அமைக்கப்பட்டது.

3 நகரின் நான்கு பக்கங்களிலும் வாயில்கள் அமைக்கப்பட்டன.

4 இவ்வாயில்களை இணைத்து நகர வீதிகள் அமைக்கப்பட்டன.

5 நகரை அழகுபடுத்த பூங்காக்களும், தடாகங்களும் அமைக்கப்பட்டன

6 நகரை நிர்வகிக்க நகரகுத்திக என்ற பதவியை ஏற்படுத்தினான்.

7 நகரின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்ய பசவக்குளத்தை அமைத்தான்

8 நகரின் தூய்மையைப் பேணுவதற்கு தொழிலாளர்கள் பலர் நியமிக்கப்பட்டனர்.

**07 காசியப்பனால் அமைக்கப்பட்ட சிகிரிய நகர நிர்மாணத்தில் பயன்படுத்தப்பட்ட தொழினுட்ப முறைமைகள் எவை?**

1 மிகப்பெரிய தனிக்குன்றை மையமாகக் கொண்டு நகரம் அமைக்கப்பட்டது.

2 200 அடி உயரமான குன்றில் 3 ஹெக்டெயர் அளவிற்கு அரசமாளிகை அமைக்கப்பட்டது.

3 சிகிரியாக்குன்றை அடிப்படையாகக்கொண்ட கிழக்கு மற்றும் மேற்குப்பாதைகள் 40, 90 ஹெக்டெயர் பரப்பினை உடையனவாக அமைந்தன.

4 நகரைச்சுற்றி பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட 10 கிலோமீற்றர் நீளமான மதில் காணப்படுகின்றது.

5 சிகிரியாக்குன்றைச் சுற்றி 8 கிலோமீற்றர் நீளமான அகழி அமைக்கப்பட்டது

6 சிகரியாவின் உச்சிக்கு குழாய் மூலம் நீர் கொண்டு செல்லப்பட்டது

7 மேற்குக் குகையில் உலகப்புகழ்பெற்ற ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

8 குகைக்கு கீழேயுள்ள கண்ணாடிச்சுவரில் கிறுக்கல் கவிதைகள் உள்ளன.

9 சிகிரியாவின் உச்சிக்கு செல்லும் வழியில் சிங்கத்தின் முன்னங்கால்கள் செதுக்கப்பட்டுள்ளது.

10 சிகிரியாவுக்குச் செல்லும் பாதையில் அழகிய பூங்காக்கள் அமைக்கப்பட்டன.

**08 புராதன காலத்தில் சுகாதார, வைத்திய வசதிகள் எவ்வாறு காணப்பட்டன?**

1 பண்டுகாபயனால் அனுராதபுரத்தில் பிரசவஇல்லம் அமைக்கப்பட்டது.

2 துட்டகைமுனு 18 வைத்தியசாலைகளை அமைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

3 புத்ததாச மன்னன் வலது குறைந்தோருக்கான வைத்தியசாலையை அமைத்ததோடு சாரணார்த்தசங்கிரஹய என்னும் வைத்திய நூலையும் எழுதினான்.

4 4ம் காசியப்ப மன்னன் காய்ச்சலால் பாதிக்கபட்டவர்களுக்கென தனியான வைத்தியசாலையை அமைத்தான்.

5 1ம் உபதிஸ்ஸ மன்னன் கர்ப்பிணித் தாய்மார்களின் தேவைக்காக பிரசவ விடுதிகளை அமைத்தான்.

6 பொலநறுவையில் பராக்கிரமபாகுவால் வைத்தியசாலை அமைக்கப்பட்டது.

**09 ஆலாஹணபிரிவெனா அமைந்திருந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வராச்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் எவை?**

1 பெரிய வைத்தியசாலையின் அடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.(147.5 அடி நீளமானதும், 109.2 அடி அகலமானதுமான கட்டடம்)

2 வைத்திய உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (சத்திரசிகிச்சைக்காகப் பயன்படுத்தப்பட்ட கத்தரிக்கோல்கள்)

3 பாம்பினால் தீண்டப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவஓடம்

4 வைத்திய நூல்கள்

5 வைத்தியத்துறையை மேம்படுத்த மூலிகைத்தோட்டங்களை உருவாக்குதல்

**10 எமது முன்னோர்கள் கழிவுநீரை அகற்ற பயன்படுத்திய தொழினுட்பங்கள் எவை?**

1 அரண்மனையின் மலசலகூடங்களில் இருந்து வெளிவரும் கழிவுகள் ஆழமான குழிக்குள் விடப்பட்டுள்ளன.

2 அழுக்கு நீர் ஓடுவதற்கு சாக்கடைத்தொகுதிகள் அமைக்கப்பட்டன.

3 குளிக்கும் தொட்டிகளில் இருந்து கழிவு நீர் வெளியேற விசேட குழாய்கள் பொருத்தப்பட்டன.

4 ஆலஹன பிரவென பற்றி சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களில் கட்டடத்தின் பரப்பளவுக்கேற்ப மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருந்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**11 புராதன காலத்தில் இரும்பை உருக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட தொழினுட்பங்கள் எவை?**

1 இரும்பை உருக்குவதற்கு 1538பாகை செல்சியஸ் வெப்பநிலை தேவை.

2 இருப்பை உருக்குவதற்குப் பயன்படும் அடுப்பை எரிதப்பதற்கு இயற்கையாக வீசும் காற்றைப் பயன்படுத்தியுள்ளனர். சமனலவெவ இரும்புச்சூளையானது மலை உச்சியில் அமைக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் மலைகளுக்கிடையே வீசும் வேகமான காற்றினால் அச்சூளை 12 மணித்தியாலங்கள் எரிந்துள்ளது.

3 சமனலவெவ என்னுமிடத்தில் இரும்பைப் பெற்றுக்கொள்வதற்காக லிமனைட், ஹெமடைட் எனும் இரசாயனப்பெயர்கொண்ட கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3 இந்த அடுப்பை எரிப்பதற்கு மரங் எனப்படும் மரத்தை எரித்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட கரியே பயன்படுத்தப்பட்டுள்ளது.

4 தெஹிகஹ எனும் இடத்தில் அகழப்பட்ட இரும்புச்சூளை எரிவதற்கு இன்று கொல்லர்பட்டறையிலுள்ளது போன்று ஊதுளையே பயன்படுத்தப்பட்டது.

**12 புராதன காலத்தில் இடம்பெற்ற உள்நாட்டுச் சம்பிரதாயங்கள் எவை?**

1 விவசாயத் தேவைகளின் பொருட்டு பல்வேறு பூசைகளைச் செய்தனர்.

2 வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் வெவ்வேறு தெய்வங்களுக்கு பூசைகளைச் செய்தனர்.

3 நெய் அல்லது நல்லெண்ணெய் ஆகிய ஒன்றைக்கொண்டு விளக்குகளை ஏற்றி வழிபட்டனர்

4 பயிர்களுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்கவும், மாடுகளுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்கவும் சில சமய ஆசாரங்களைச் செய்தனர்.

# அலகு 06

## வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப்பரதியீடும்

### 01 புராதன சமுக அமைப்பின் சிறப்பியல்புகள் எவை?

1 நாட்டின் தலைவனாக அரசன் இருந்து மக்கள் நலனுக்காக தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினான்.

2 மேலிருந்து கீழாக நிர்வாகம் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது'

3 மக்களது தேவைகளும், குறைபாடுகளும் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் வகையில் அமைந்தது.

4 சமயத்திற்கும், ஒழுக்கத்திற்கும் முக்கியமளித்தமையால் அரச அதிகாரிகள் நேர்மையாகச் செயற்பட்டனர்.

5 மன்னர்களினதும், மக்களினதும் சிந்தனைகள் உயர்வாக இருந்தது. இயற்கை வளங்களை பாதுகாப்பவர்களாக அவர்கள் விளங்கினர்.

6 ஒவ்வொரு மட்டத்தில் உள்ளவர்களும் தமக்குமேல் மட்டத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியிருந்தது.

### 02 புராதன காலத்தில் வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட வரிகள் எவை?

தக்கபதி – குளங்களில் நீரைப் பயன்படுத்துவோரிடம் பெறப்பட்டவரி

போஜக்கபதி - அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்கு விதிக்கப்பட்ட வரி

மதரமமஞ்சக்க - வாய்க்கால்களின் மீன் பிடித்தல் தொடர்பான வரி

மாத்ரிக்க மத்சய பாகய – குளங்களிலிருந்து வயலை நோக்கி வரும் சிறுவாய்க்காலில் மீன்பிடித்தல் தொடர்பான வரி(மாத்ரிக்க – சிறு வாய்க்கால்)

சுங்கவரி - வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் பொது துறைமுகங்களில் அறவிடப்பட்ட வரி(கொடவாய கல்வெட்டில் இவ்வாறு பெறப்படும் வரி விகாரைகக்கு கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது)

### 03 குற்றச் செயல்கள் தொடர்பாக இயற்றப்பட்ட சட்டங்கள் எவை?

1 4ம் மகிந்த மன்னனால் அமைக்கப்பட்ட வேவல்கட்டிய கல்வெட்டில் களவு எடுத்தல், கொலைசெய்தல் என்பன தொடர்பாக கொடுக்க வேண்டிய தண்டனைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

2 கொலைக்குற்றத்திற்கு மரணதண்டனை வழங்கப்பட்டது

3 மாடுகளை களவாக பிடிப்பவர்களுக்கு மிருகங்களின் உடல்களில் இடப்படும் அடையாளங்கள் அவர்களது நெற்றியில் இடப்படல் வேண்டும்

4 தலைமறைவாகி இருக்கும் குற்றவாளியை ஒப்படைப்பது கிராமத்தவர்களது பொறுப்பாகும். அக்குற்றவாளி ஒப்படைக்கப்படும்வரை அவர்கள் உள்நாட்டுத் தண்டப்பணம் என்னும் வரியைச் செலுத்தினர்.

## 04 புராதன காலத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புக்கள் எவை?

1 பெண்கள் ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர்.

2 பெண்களின் விருப்பங்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.(அனுலாதேவி விருப்பின் பேரில் பிக்குணியாக மாறினார்)

3 பெண்கள் தனியாக பாதுகாப்புடன் வாழ்ந்துள்ளனர்.

4 பெண் ஒரு தாய் என்ற ரீதியில் உயர்ந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இன்னாருடைய மனைவி, இன்னாருடைய சகோதரி என்றே அழைத்துள்ளனர்.

5 கணவன் தன் மனைவியை உயர்வாகப் போற்றினான். (வலகம்பாகு தனது மனைவியின் பெயரில் சோமராம விகாரையை அமைத்தான்)

6 பெண்களுக்கு தேவையான கல்வியை வழங்குவது பெற்றோர்களின் கடமை என சகஸ்ஸ வத்துப்பகரண என்னும் நூல் கூறுகின்றது.

7 பெண்கல்விக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் மதுபாச்சிகா என அழைக்கப்பட்டனர் என தம்பியா அட்டுவ ஹட்டபதயாவில் கூறப்பட்டுள்ளது. மதுரஹத்தரசா எனவும் அழைக்கப்பட்டனர். இதன் கருத்து கைராசி என்பதாகும்.

8 பிரதேச ஆட்சியாளர்களாகவும் பெண்கள் இருந்துள்ளனர். இவர்கள் பருமகலு என அழைக்கப்பட்டுள்ளனர்.

9 விகாரைகளுக்கும் பிக்குகளுக்கும் தமது செல்வங்களை தானமாக வழங்கிய பெண்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

10 பெண்கள் திருமணம் செய்ய வேண்டும் என்பது சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாக இருந்தது. 16 வயதை அடைந்ததும் திருமணம் செய்ய அவள் தகுதியுடையவள். திருமணம் செய்யும் வயதை அடையும் வரை பெண்கள் தமது பெற்றோரின் பாதுகாப்பிலேயே இருக்க வேண்டும்.

## 05 புராதன காலத்தில் பெண்கள் தங்களை அலங்கரித்தும் கொண்டனர் என்பதற்கு ஆதாரங்கள் எவை?

1 கி.மு.1129 ஆம் அண்டில் பெண்கள் கண்களுக்கு மைதீட்டப் பயன்படும் உலோகக்கம்பியொன்று உடரஞ்சாமடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

2 களிமண் மணிகளும், சிவப்பு மஞ்சள் நிறங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் நிறங்களைப் பூசியுள்ளமையை அறிய முடிகின்றது.

3 இப்பன்கட்டுவா(கி.மு 700 – 450 காலப்பகுதியைச் சேர்ந்த பழைய மயானம்) பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கழுத்துச் சங்கியிலியில் பயன்படுத்தப்பட்டுள்ள மணிகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. எனவே ஆபரணங்களையும் அணிந்துள்ளனர்.

**06 புராதனகால மக்கள் ஆரோக்கியமான சுதேச உணவுகளை உட்கொண்டுள்ளனர் என்பதனை ஆதராத்துடன் குறிப்பிடுக?**

1 தானியங்களை உணவாகப் பயன்படுத்தியுள்ளனர்.

2 உணவினை சுவையூட்டுவதற்கு வாசனைத்திரவியங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

3 கஞ்சியை உணவாகக் கொண்டுள்ளனர்.

4 பால் கிராமங்களில் முக்கிய உணவாக இருந்துள்ளது. பசுக்களைக்

5 அக்கால மக்கள் தரைவாழ் உயிரினங்களை மட்டுமன்றி மீனையும் உணவாக உட்கொண்டுள்ளனர்.

6 மாமிச உணவுகளும் அக்கால மக்களது உணவில் இடம்பெற்றது.

7 தானியங்களை வறுத்து அதன்மூலம் பெறப்பட்ட உணவு அத்சுனு எனப்பட்டது.

8 தம்பியா அட்டுவா என்ற நூலில் கூறப்படும் திலசங்குலிகா என்பது எள்ளுருண்டையை குறிப்பதாக அமையலாம் எனக் கருதப்படுகிறது.

9 கிழங்கைக் குறிப்பதற்கு சத்தர்மரத்னாவலியில் சொடல என்ற சொல் பயன்பட்டுள்ளது.

10 கெட்டியான கறி நியாம்பலாவ எனப்பட்டது.

11 மரக்கறிகளையும் உட்கொண்டுள்ளனர்.

**07 புராதனகாலத்தில் வாழ்ந்த மக்கள் சூழல் பாதுகாப்பில் அதிக அக்கறை கொண்டிருந்தனர் என்பதை ஆதாரத்துடன் குறிப்பிடுக?**

1 மரஞ்செடிகளை வெட்டுவதனால் பாதிப்பு ஏற்படும் என்பதையுணர்த்திருந்தனர்

2 காடுகளை அழிப்பதனால் பல கேடுகள் ஏற்படும் என்பதையுணர்ந்தமை.

3 சூழல் முகாமைத்துவம் சிறப்பாகப் பேணுவதில் அக்கறை காட்டினர்

4 உரிய காலத்திற்கு முன் வயலில் அறுவடை நடந்தால் மண்ணரிப்பு ஏற்படும் என்பதனால் அதனைத் தடை செய்தனர்.

5 வாய்க்காலில் கட்டுப்பாடற்ற முறையில் மீன் பிடித்தால் மீன்வளம் அற்றுப்போகும் என்பதனால் மாத்ரிக்க மத்சய பாகய என்னும் வரியை அறவிட்டனர்.

## அலகு 7

## உலர் வலய பண்டைய நாகரிகங்களின் வீழ்ச்சி

### 01 உலர் வலயங்களில் புராதன நகரங்கள் வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்த காரணிகளைத் தந்து விளக்குக?

1 நிரந்தரமாக ஓரிடத்தில் வாழ்ந்தமை

2 மிகை உற்பத்தியினால் அதிக வருமானம் கிடைத்தமை

3 வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை

4 அரச முயற்சிகள்

### 02 உலர் வலய புராதன நகாரிகங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 பலவீனமான மன்னர்களின் ஆட்சி

2 மத்திய அரச நிர்வாகம் சீர்கலைந்தமை.

3 அந்நியரின் ஆக்கிரமிப்பு

4 பாதுகாப்பு இல்லாது போனமை

5 பொருளாதார வீழ்ச்சி

### 03 பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 பலவீனமான மன்னர்களின் ஆட்சி

2 கலிங்க பாண்டிய வம்சப் போராட்டம்

3 மாகனின் ஆக்கிரமிப்பு

4 பொருளாதார வீழ்ச்சி

### 04 இரண்டாம் நகரமயமாக்கலின் அடிப்படைகள் எவை?

1 அரசியல் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டமையினால் பல நிர்வாக மையங்கள் செயற்பட்டமை (சுபதளபதியினால் யாப்பகூவா வளரச்சியடைந்தது)

2 சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. புதிய துறைமுகங்கள் தோன்றின. கற்பிட்டி, புத்தளம் முதலிய துறைமுகங்களின் வளர்ச்சி காரணமாக தம்பதெனியா, குருநாகல் இராசதானிகளும், கொழும்பு, பேருவளை துறைமுக வளர்ச்சி காரணமாக கோட்டையும் முன்னேறின.

3 இலக்கியங்கள் வளர்ச்சிடைந்தமை காரணமாக நூல்களைக் கற்கும் ஆர்வமும் அறிவும் விருத்தியடைந்தன.

4 கறுவா, மிளகு, ஏலம் என்பன உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன.

## 05 3ம் விஜயபாகு ஆற்றிய பணிகள் எவை?

**அரசியல் பணி**

கலிங்கமாகன் பொலநறுவையில் அரசாட்சி புரிந்த கொண்டிருந்தபோது அவனுக்குச் சவாலாக மாயரட்டையின் எல்லையில் சுதந்திரமான சிங்கள அரசொன்றை அமைத்தமை

**சமயப்பணி**

1 கொத்மலையில் ஒளித்து வகைக்கப்பட்டிரந்த தந்ததாதுவை பெலிகலை மலைஉச்சிக்கு எடுத்துவந்து தலதாமாளிகை அமைத்தமை.

2 தம்பதெனியாவில் விஜயசுந்தரராமய விகாரையை அமைத்தமை

3 களினவிகாரை, அத்தனகலவிகாரை, மகியங்களை விகாரை என்பவற்றைப் புனரமைத்தமை

4 வெளிநாடுகளுக்கு பாதுகாப்பிற்காகச் சென்ற பௌத்த பிக்குகளை மீண்டும் அழைப்பித்து பாதுகாப்பு வழங்கியமை

5 உபசம்பதா சடங்கை நடாத்தி புத்தசசானத்தை தூய்மைப்படுத்தியமை

6 வாசிஸ்ரதேரர், சங்கிரக்கித மகாதேரர் முதலானோரின் உதவியுடன் அழிந்தபோன பௌத்த சமய நூல்களை எழுதுவித்தமை

### 06 2ம் பராக்கிரமபாகுவின் பணிகள் எவை?

**அரசியல் பணி**

1 கி.பி 1247ல் சந்திரபானு என்ற ஜாவா நாட்டு ஆக்கிரமிப்பாளனை முறியடித்தமை.

2 பொலநறுவையில் 40 ஆண்டுகள் ஆட்சிசெய்த கலிங்கமாகனைத் தோற்கடித்தமை.

3 சந்திரபானுவின் இரண்டாவது படையெடுப்பை முறியடித்தமை.

**சமயப்பணி**

1 பிக்குகளின் ஒழுக்க நெறிக்கோவையாகிய தம்பதெனிய கதிகாவத்தைய எழுதுவித்தான்.

2 வருடந்தோறும் உபசம்பதா சடங்கினை செய்வித்ததொடு தானும் பங்குகொண்டான்.

3 பெலிகலையிலிருந்த தந்ததாதுவை எடுத்த வந்து தம்பதெனியாவில் தலதாமாளிகை அமைத்தான்.

4 தர்மகீர்த்தி மகாதேரரை வரவழைத்து அவரது தலைமையில் இலங்கையில் அடவி மடத்தை அமைத்தான்.

5 இவனது காலத்திலேயே இரத்தினபுரியில் சமன் தேவாலயம் அமைக்கப்பட்டது.

6 தேவபதிராஜ என்ற அமைச்சரின் உதவியோடு, பௌத்த சமய கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பாடுபட்டான்.

**இலக்கியப்பணி**

1 சிறந்த கல்விமானாகவும் பண்டிதனாகவும் விளங்கினான் இதனால் கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித என அழைக்கப்பட்டான்.

2 கவிசிலுமின என்ற கவிதை நூலையும், வனவினியசன்ய, விசுத்திமார்க்கசன்னய என்னும் உரைநூல்களையும் எழுதினான்.

3 அரண்மனைச் சூழலில் இலக்கிய அறிவுமிக்க புலவர்களைப் போற்றி வந்ததுடன் இலக்கியங்கள் பலவும் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்தினான்.

## 07 4ம் பராக்கிரமபாகுவின் பணிகள் எவை?

1 பாளி மொழியில் இருந்த 550 ஜாதகக் கதைகளை (பன்சிய பனஸ் ஜாதகய) சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமை

2 கல்வி அறிவும், இலக்கிய ஆர்வமும் கொண்டவனாகக் காணப்பட்டான்.

3 இலக்கிய வளர்ச்சிக்கு பங்காற்றினானன். இவனது காலத்தில் தலதாசிரித, சிங்களபோதிவம்ச, அனாகதவம்ச, தலதா பூஜாவலிய போன்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

4 குருநாகலில் தந்ததாதுவிற்கு தலதா மாளிகை அமைத்தான்.

5 கண்டிக்கு செங்கடலபுரய எனப்பெயரிட்டான்.

7 தலதாமாளிகையின் நிர்வாக செலவுக்காக பல கிராமங்களை ஒதுக்கினான்.

## 08 6ம் பராக்கிரமபாகு ஆற்றிய பணிகள் எவை?

**அரசியல் பணி**

1 நாடு முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தமை

2 வெளிநாட்டுக்கு படை அனுப்பி வெற்றி பெற்றமை

**கல்விப்பணி**

1 பிரிவெனாக்களை அமைத்தமை.

2 புகழ்பெற்ற கல்விமான்களை நியமித்தமை

**இலக்கியப்பணி**

1 சிங்கள் இலக்கியத்தின் பொற்காலம் எனப்பட்டமை

2 பல்வேறு வகையான இலக்கியங்கள் எழுச்சி பெற்றமை

## 09 இரண்டாம் நரகமயமாக்கலின் போது காணப்பட்ட பொருளாதாரக் கோலத்தின் இயல்புகள் எவை?

1 நீர்ப்பாசனம் செய்யவேண்டிய தேவை ஏற்படவில்லை.

2 மக்களின் சீவனோபாயமாக விவசாயமே முக்கியம் பெற்றது.

3 நீர் பற்றாக்குறையான பகுதிகளில் சேனைப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

4 விவசாயப் பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரமாக மாறியது.

5 ஈரவலயக் காடுகளில் இயற்கையாக விளைந்த கறுவா இக்காலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகப் பயிராக மாறியது.

6 இந்தியா, சீனா, அரேபியா, பாரசீகம், எகிப்து போன்ற நாடுகளோடு வர்த்தகத் தொடர்பு காணப்பட்டது.

7 சீனாவிலிருந்து பீங்கான் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமைக்கு தெடிகம பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் சான்றாகும்.

8 உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய கடைவீதிகள் இருந்ததாக குருநாகலின் விபரம் என்ற ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 10 இரண்டாம் நகரமயமாக்கலின் சமய நிலையின் இயல்புகளை குறிப்பிடுக?

1 பிரதான சமயமாக பௌத்தம் விளங்கியது.

2 தம்பதெனியா முதல் கோட்டை வரை தலதாமாளிகை அமைப்பதில் மன்னர்கள் ஆர்வம் காட்டினர்.

3 இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டமை.

4 விஸ்ணு. விபீஸணன், முருகன், சமன் முதலிட்ட தெய்வங்கள் வழிபடப்பட்டுள்ளன.

5 ஸ்ரீ ஜயவர்த்தனபுரவிற்கு அண்மையில் சிவாலயம் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

6 சிலாபத்தில் அமைக்கப்பட்ட முன்னேஸ்வரம் இந்துக்கோவிலாகும்.

7 வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களுக்கு தாம் வாழ்ந்த கரையோரத் துறைமுக நகரங்களுக்கு அண்மையில் பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 11 இரண்டாம் நகரமயமாக்கல்கால கட்டடக்கலையின் இயல்புகள் எவை?

1 யாப்பகூவா முதல் கோட்டைவரை அமைக்கப்பட்ட கட்டடக்கலையில் தென்னிந்திய செல்வாக்கு பிரதிபலிக்கின்றது.

2 யாப்பகூவா படிவரிசை, தூண்களில் பாண்டிய மற்றும் காபம்பூச்சிய கலை மரபுகள் பின்பற்றப்பட்டுள்ன.

3 புத்த கோயில்களுடன் இணைந்ததாக இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன. (கடலாதெனிய சிலைமனைக்கும், லங்காதிலக சிலைமனைக்கும் அண்மையில் இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டமை)

4 கம்பளை காலத்தில் 3ம் விக்கிரமபாகுவால் அமைக்கப்பட்ட அம்பக்க தேவாலயம் ஒரு முருகன் கோயிலாக இருப்பதோடு மரச்செதுக்கல் வேலைப்பாட்டிற்கு பெயர் பெற்றதாகும்.

## அலகு 8

## கண்டி இராசதானி

**01 கண்டி இராச்சியம் இயற்கை அரண்களால் சூழப்பட்ட ஒரு பாதுகாப்பான இராச்சியமாகும் உதாரணங்கள் தந்து விளக்குக?**

1 மகாவலிகங்கை கண்டி நகரை முழங்கை வடிவில் டிசன்று பாதுகாப்பு வழங்குகிறது. கண்டிக்கு கிழக்கான உடவத்தை மலைத்தொடரும் தெற்கில் ஹந்தானை மலைத்தொடரும் பாதுகாப்பை வழங்கின.

2 பலன, உன்னஸ்கிரிய, பலக்கட்டுவ, கடுகண்ணாவ முதலிய கடினமான பாதைகளினூடாகவே கண்டி நகருக்குள் செல்லலாம்.

3 கண்டி இராச்சியம் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டிருந்தது.

4 கண்டி இராச்சியத்தின் குளிரும், அதிக மழையும் கண்டி இராச்சியத்திற்கும் நுழைவதற்கு எதிரிகளுக்கு சிரமங்களைக் கொடுத்தன.

**02 1ம் விமலதர்மசூரியன் எதிர்நோக்கிய சவால்கள் எவை?**

1 சட்டபூர்வ ஆட்சி உரிமை இல்லாமை

2 கண்டி இராச்சியத்தை போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டியிருந்தமை.

3 கண்டி இராச்சியத்தை சீதாவாக்கையின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்க வேண்டியிருந்தமை.

4 வீழ்சியுற்றிருந்த பௌத்த சமயத்தை மீளவும் எழுச்சி பெறச்செய்ய வேண்டியிருந்தமை.

5 கண்டி இராச்சியத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியிருந்தமை

**03 1ம் விமலதர்மசூரியன் மலைநாட்டில் தனது ஆட்சி உரிமையை நிலைநாட்டிக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் எவை?**

1 கண்டி இராச்சியத்தின் அரசுரிமைக்குரியவளான குசுமாசனதேவியை திருமணம் செய்து கொண்டமை

2 றோமன்கத்தோலிக்க சமயத்தைக் கைவிட்டு பௌத்த சமயத்திற்கு மாறியமை.

3 விமலதர்மசூரிய என்னும் பௌத்த நாமத்தை சூடிக்கொண்டமை

4 சீதாவாக்கையின் தெல்கமுவ விகாரையில் வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை கொண்டுவந்து கண்டியில் தலதாமாளிகை அமைத்தமை.

**04 போர்த்துக்கேயரின் ஆட்சியிலிருந்து கண்டி இராச்சியத்தைக் காப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் எவை?(அரசியல் பணி)**

1 போரோலொபஸ்டிசூசா தலைமையில் 1594இல் இடம்பெற்ற கண்டி மீதான படையெடுப்பை தந்துரே என்னுமிடத்தில் வைத்து முறியடித்து போர்த்துக்கேயரை தோல்வியடைச் செய்தான்.

2 1602இல் தொன் ஜெரனிமோ டி அசிவிடோ தலைமையில் இடம்பெற்ற போர்த்துக்கேய ஆக்கிரமிப்பை பலன என்னுமிடத்தில் வைத்து முறியடித்தான்.

3 போர்த்துக்கேயருக்கு எதிராக தாழ்நாட்டில் ஏற்படும் கலககங்களுக்கு ஆதரவளித்தான்.

4 போர்த்துக்கேயரை விரட்டுவதற்காக ஒல்லாந்தரின் உதவியை நாடினான்.

இதற்காக 1602இல் ஒல்லாந்து தூதர்களான ஸ்பில்பேர்ஜன், சீபோல்தவாட் ஆகியோரைச் சந்தித்தான்.

**05 1ம் விமலதர்மசூரியன் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகள் எவை?**

1 பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கை நிகழ்த்தினான்.

2 தெல்கமுவ விகாரையில் வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவிற்கு கண்டியில் தலதாமாளிகை அமைத்தான்.

3 1ம் விமலதர்மசூரிய என்ற பௌத்த நமத்தைச் சூடிக்கொண்டமை.

4 பழைய விகாரைகளை புனரமைப்புச் செய்தான். உதாரணம் லங்காதிலகவிகாரை, கடலாதெனியவிகாரை, ரிதிவிகாரை

5 கண்டி இராச்சியத்தை பௌத்த மக்களின் மத்திய நிலையமாக்கினான்.

**06 1ம் விமலதர்மசூரியன் கண்டியின் பொருளாதார விருத்திக்காக மேற்கொண்ட முயற்சிகள் எவை?**

1 நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து விவசாயத்தை முன்னேற்றமடையச் செய்தான்.

2 பருத்தி பயிர்ச்செய்கைக்கு உதவியளித்தான்.

3 கொத்மலை, வலப்பனை ஆகிய இடங்களில் இருப்புருக்கு கைத்தொழிலை மேற்கொள்ள நடவடிக்கையெடுத்தான்.

4 வெடிமருந்திற்குத் தேவையான உப்பு உற்பத்திக்கைத்தொழிலை வளர்த்தான்.

**07 2ம் இராஜசிங்கன் எதிர்நோக்கிய சவால்கள் எவை?**

1 கண்டி இராச்சியத்தின் மீதான போர்த்துக்கேயரின் தாக்குதல்

2 போர்த்துக்கேயரை இந்நாட்டிலிலிருந்து வெளியேற்றுதல்.

3 கண்டி இராச்சியப் பிரதானிகளின் எதிர்ப்பினைக் கட்டுப்படுத்துதல்.

4 ஒல்லாந்தரின் ஆக்கிரமப்பிலிருந்து கண்டியைக் காத்தல்

## 08 2ம் இராஜசிங்கனின் பணிகள் எவை?

1 போர்த்துக்கேயரது ஆக்கிரமிப்புக்களை முறியடித்தமை

2 போர்த்தக்கேயரை இந்நாட்டிலிலிருந்து வெளியேற்றியமை

3 ஒல்லாந்தாரிடமிருந்து கண்டி இராச்சியத்தைப் பாதுகாத்தமை

## 09 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆற்றிய சமயப்பணிகள் எவை?

1 சீயம் நாட்டிலிருந்து உபாலிதேரர் தலைமையில் பிக்குகளை 1753ல் வரவழைத்து உபசம்பதா சடங்கை நிகழ்த்தினான். இதன் காரணமாக சீயம் நிக்காய இலங்கையில் ஏற்பட்டது.

2 கண்டி இராச்சியத்திலும் தாழ் நாட்டிலும் காணப்பட்ட விகாரைகளைப் புனரமைத்தான். அளுவிகாரை, தம்புள்ளவிகாரை, லெனகலவிகாரை

3 வெலிவிட்ட சரணங்கரதேரருக்கு சங்கராஜா பதவியை வழங்கினான்.

## 10 கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பினை விளக்குக?

1 கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பில் முதன்மை நபராக அரசன் விளங்கினான்.

2 அரசனுக்கு அடுத்து அதிகாரம் பெற்றவர்களா மஹாஅதிகாரம் விளங்கினர்.

3 அரசின் முக்கிய விடயங்களைக் கதைப்பதற்கு அரசசபை இருந்தது.

4 கண்டி இரசதானிக்காலத்தில் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நான்கு பிரிவுகள் இருந்தன.

## 11 கண்டி இராச்சியத்தின் நீதிமுறையின் இயல்புகள் எவை?

1 உயர் அதிகாரம் மன்னனிடம் இருந்தது.

2 அரசனால் பல வழங்குகள் விசாரிக்கப்பட்டன.

3 பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டிருந்தன.

## 12 கண்டியின் பொருளாதார அமைப்பின் இயல்புகள் எவை?

**விவசாயம்**

1 விவசாயப் பொருளாதாரமாகக் காணப்பட்டது.

2 நுகர்வை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாகும்.

3 பொருளாதாரம் சுயதேவைப்பூர்த்தியை அடிப்படையாகக் கொண்டிருந்தது

4 மலைப்பாங்கான பிரதேசமாகையால் நெற்செய்கைக்கான நிலம் வரையறுக்கப்பட்டிருந்தது

5 பள்ளத்தாக்குளில் படிமுறைகளிலும், சமவெளிகளில் வயல் நிலங்களிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

6 அதிகமான நிலம் சேனைப்பயிர்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டது.

7 குரக்கன், சோளம், தினை, சாமை போன்ற தானியங்களும், கிழங்குகளும் சேனைகளில் உற்பத்தி செய்யப்பட்டன.

8 வீட்டுத்தோட்டங்களில் பலாக்காய், ஈரப்பலாக்காய், மிளகு, சாதிக்காய், மரக்கறிகள், பழவகைகள் என்பன பயிரிடப்பட்டன.

**கைத்தொழில்**

1 இரும்புருக்குத் தொழில் இடம்பெற்றது (1ம் விமலதர்மசூரியன் காலத்தில் கொத்மலை, வலப்பனை அகிய இடங்களில் இரும்புருக்கு ஆலைகள் செயற்பட்டன). கத்தி, மண்வெட்டி முதலிய உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன.

2 பரம்பரைக் கைத்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டன.

3 இரும்பு, மரம், அரக்கு, களிமண் கைத்தொழில்கள் முன்னேற்றமடைந்திருந்தன.

**வர்த்தகம்**

1 உயர் குடிமக்களுக்குத் தேவையான துணிவகைகள், ஆபரணங்கள், கருவாடு போன்றன இறக்குமதி செய்யப்பட்டன.

2 ஏற்றுமதிப் பொருட்கள் அரசனின் களஞ்சிய சாலையிலிருந்து வழங்கப்பட்டன. (கறுவா, ஏலம், சாதிக்காய்)

3 உள்நாட்டு வர்த்தகம் பயண்டமாற்றை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றது.

4 பணப்புழக்கம் அரிதாகக் காணப்பட்டது.

## 13 கண்டி இராச்சிய சமூக ஒழுங்கமைப்பின் இயல்புகள் எவை?

1 பல்வேறு நிலப்பிரிவுகள் காணப்பட்டுள்ளமை.

2 கிராமிய சமூக அமைப்பே காணப்பட்டது.

3 பொதுமக்களினால் வழங்கப்படும் சேவை இராஜகாரிய முறை எனப்பட்டது

4 கிராமங்கள் சுயதேவையை பூர்த்தி அடைந்திருந்தன.

5 சமூகம் குலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது

6 திருமணங்கள் தத்தமது குலத்தவரிடையே நடைபெற்றது

7 தீக (மணமகளை மணமகன் தனது வீட்டுக்கு கூட்டிச் செல்லல்), பின்ன (மணமகன் மணமகள் வீட்டில் வாழ்தல்), பல்புருச திருமணம் என்பன மேற்கொள்ளப்பட்டன.

8 கிராமிய சமூகத்தில் அனைத்து நடவடிக்கைகளும் உழைப்புக்கும் பதிலாக உழைப்பு (அத்தம்) என்னும் முறையில் இடம்பெற்றது.

9 குடும்பம் பிரதான சமூக அலகாகும்.

10 நற்பண்புகளைக் கைக்கொள்ளல் சமூகத்தின் பிரதான இலட்சணமாயிருந்தது.'.

11 கிராமிய வாழ்க்கையின் பிரிக்க முடியாத அம்சமாக விகாரைகள் காணப்பட்டன

அலகு 9

மறுமலர்ச்சி

## 01 மறுமலர்ச்சி தோன்றியமைக்கான காரணங்களைத் தந்து அவற்றை விளக்குக?

1 கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்பட்டமை

2 செல்வந்த வர்க்கத்தினரின் தோற்றம்

3 அறிவு வளர்ச்சியடைந்தமை

4 அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை

## 02 மறுமலர்ச்சியினால் ஐரோப்பாவில் ஏற்பட்ட விளைவுகள் எவை?

1 சமயச்சீர்திருத்தம்

2 கலைகள் வளர்ச்சியடைந்தமை

3 மானிடவாதம் தோன்றியமை

4 விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தமை

5 அரசியல் மறுமலர்ச்சி ஏற்பட்டமை

6 பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டமை

7 நாடுகாண் பயணங்கள் ஏற்பட்டமை

## 03 மறுமலர்ச்சிக்கால அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

1 தேசிய அரசுகளின் தோற்றம்

2 மத்தியதர வர்க்கம் தோன்றியமை

3 உரிமைகள் வளர்ச்சியடைந்தமை

## 04 மறுமலர்ச்சியினால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

1 வர்த்தகம் விருத்தியடைந்தது

2 சுயதேவைப் பொருளாதாரம் சிதைவடைந்தது.

3 பணப்புழக்கம் அதிகரித்தமை

## 05 புதிய வர்த்தகப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 1453இல் கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்படதால் தரைவழிப்பாதை தடைப்பட்டமை

2 கிழக்கிலிருந்து வரும் பொருட்களுக்கு எகிப்திய சுல்தான் அதிக வரி விதித்தமை

3 புவி கோளவடிவானது என்பது நிரூபிக்கப்பட்டமை

4 கப்பல்கள், திசையறிகருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமை

5 தேசிய அரசுகளின் மன்னர்கள் நாடுகாண் பயணிகளுக்கு உதவியமை

## 06 மறுமலர்ச்சியானது உலக மயமாதலுக்கு வித்திட்ட முறையைக் குறிப்பிடுக?

1 ஐரோப்பியரால் மேற்கொள்ளப்பட்ட நாடுகாண் பயணங்கள் காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கும் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

2 ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்க கண்டங்களில் ஐரோப்பியர் சென்று குடியேறியதோடு இவை குடியேற்ற நாடுகாளகவும் மாற்றமடைந்தன.

3 அச்சுத்தொழில் உலகெங்கும் பரவியமை.

4 குடியேற்ற நாடுகளில் காணப்பட்ட செல்வந்தர்களின் பிள்ளைகள் மேற் படிப்பிற்காக ஐரோப்பாவுக்கு செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது.

5 ஐரோப்பியர் தமது குடியேற்ற நாடுகளில் தமது சமயத்தைப் பரப்ப முனைந்தனர்.

6 கீழைத்தேய நாடுகளில் ஐரோப்பியரது விஞ்ஞான தொழினுட்ப அறிவு பரவலடைந்தமை.

## 07 ஐரோப்பாவில் சிந்தனை மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமான மறுமலர்ச்சியின் பங்களிப்புக்கள் எவை?

1 மதச் சீர்திருத்தம்

2 அச்சுக்கலையின் முன்னேற்றம்

3 முதலாளித்துவ எழுச்சி

4 கைத்தொழில் புரட்சி

## 08 மறுமலர்ச்சியானது இலங்கையின் அரசியலில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை?

**சாதகமான அம்சங்கள்**

- ஆங்கிலேயரால் கண்டி கைப்பற்றப்பட்டதும் முடியாட்சி முறை நீக்கப்பட்டது.
- அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பாராளுமன்ற ஆட்சி முறை தோன்ற வழிவகுத்தது.
- பிரதேச ஆட்சி முறைகள் மாற்றமடைந்தன. மரபு ரீதியான அலுவர்களுக்குப் பதிலாக புதிய ஆட்சி முறைக்குப் பொருத்தமான அலுவர்கள் நியமிக்கப்பட்டனர்.
- பழைய சட்டதிட்டங்கள் நீக்கப்பட்டன.

**பாதகமாக அம்சங்கள்**

1 இலங்கை தனது சுதந்திரத்தை இழந்தமை.

2 பிரித்தானியர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறுக் சீர்திருத்தத்தில் காணப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவம் காரணமாக இனங்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றக் காரணமாகியது.

## 09 மறுமலர்ச்சியானது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை?

**சாதகமான அம்சங்கள்**

- ஐரோப்பியர் இலங்கைக்கு வந்ததனால் நெருங்கிய வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டது.
- வர்த்தக நோக்குடன் ஒல்லாந்தரால் கறுவாவும், பிரித்தானியரால் கோப்பி, தேயிலை, கொக்கோ, இறப்பர் போன்ற வர்த்தகப் பயிர்கள் பயிரிட ஆரம்பித்தனர்.
- இலங்கையில் முன்னர் நிலவிய சுயதேவைப்பூர்த்திப் பொருளாதாரமானது ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரமாக மாறியது.
- பணப்புழக்கம் அதிகரித்தது
- புகையிரதப்பாதைகள், பெருந்தெருக்கள், துறைமுக விருத்தி என்பன பெருந்தோட்டத்துறைக்காக உருவாக்கப்பட்டன.
- கொழும்பு, காலி, திருகோணமலை போன்ற முக்கிய வர்த்தக நகரங்கள் தோன்றின.
- மத்தியதர வகுப்பினர் தோற்றம் பெற்றமை

**பாதகமாக அம்சங்கள்**

1 நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்து அரிசியை இறக்குமதி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டது.

2 கைத்தொழில்கள் வளர்ச்சியடையாமை

3 இலங்கையின் வளங்கள் சுரண்டப்பட்டமை

4 சுயதேவைப் பொருளாதாரம் சிதைவடைந்து ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரமாக மாறியது.

## 10 மறுமலர்ச்சியானது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை?

**சாதகமான அம்சங்கள்**

- ஒல்லாந்தரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுக்கலையானது பிரித்தனியர் காலத்தில் முக்கியம் பெற்றமையினால் பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் என்பன வெளியிடப்பட்டதனால் சமுகம் அறிவுத்துறையில் வளர்ச்சியடைந்தது.
- ஐரோப்பாவிற்கு மேற்படிப்பிற்கு சென்று வந்தவர்களால் மேற்கத்தேய சிந்தனைகள் பரவலடையக் காரணமாகியது.
- போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கமும், ஒல்லாந்தர் காலத்தில் புரட்டஸ்தாந்து மதமும் பரவியது.
- ஓல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் செய்பாடுகள் காரணமாக மேலைத்தேய கல்வி முறை இந்நாட்டில் பரவியது.
- ஐரோப்பியரது ஆட்சியின் காரணமாக ஆடை அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டது.
- ஐரோப்பிய கட்டடக்கலை, ஐரோப்பிய மொழிச்சொற்கள் சுதேச மொழிகளில் கலத்தல் போன்றனவும் ஏற்பட்டது.

**பாதகமான அம்சங்கள்**

1 ஆங்கிலமொழிப் பாவனையால் சுதேச மொழிகள் பாதிப்படைந்தமை

2 கிறிஸ்தவ மதப்பரம்பல் காரணமாக சுதேச மதங்கள் பாதிக்கப்பட்டமை

3 மதுபாவனை, போதைப்பொருள் பாவனை அதிகரித்தமை

4 ஐரோப்பியரது பண்பாடே உயர்ந்தது என்ற தவறான மனநிலை ஏற்பட்டது.

அலகு 10

இலங்கையும் மேற்குலகமும்

**01 கொன்ஸ்தாந்திநோபிள்(இஸ்தான்புல்) கைப்பற்றப்படதால் ஏற்பட்ட விளைவுகள் எவை?**

1 தரைவழிப்பாதை தடைப்பட்டமை

2 ஐரோப்பாவில் வர்த்தகப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டமை

3 புதிய கடற்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டமை

4 ஐரோப்பாவில் அறிவியல் மறுமலர்ச்சி ஏற்பட்டது

**02 போர்த்துக்கேயர் கடல்வழிப்பாதையைக் கண்டுபிடிக்கமுடிந்தமைக்கான காரணங்கள் எவை?**

1 அமைவிடம்

2 அரச ஆதரவு

3 ஆற்றலுள்ள மாலுமிகள் இருந்தமை

**03 ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகை தந்தமைக்கான காரணங்கள் எவை?**

1 பொருளாதாரத்துறையில் இலாபம் பெறுதல்

2 சமயத்தைப் பரப்புதல்

3 அரசியல் ரீதியாக சர்வதேச புகழைப்பெறுதல்

**04 போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது இருந்த அரசியல் நிலைமைகள் எவை?**

1 கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று இராச்சியங்களாகப் பிரிந்து காணப்பட்டமை

2 வன்னியில் சிற்றரசுகள் காணப்பட்டன.

3 3 இராச்சியங்களிலும் கோட்டை இராச்சியமே அதிகாரமும் செல்வமும் கொண்ட இராச்சியமாக விளங்கியது. ஏனைய இரு இராச்சியங்களும் கோட்டை மன்னனின் மேலாண்மையை ஏற்றுச் செயற்பட்டன.

**05 போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்ற உதவிய காரணிகள் எவை?**

1 கோட்டை ஆட்சியாளர்களிடம் காணப்பட்ட ஒற்றுமையின்மை

2 தர்மபாலனின் செயற்பாடுகள்

3 போர்த்துக்கேயரின் படைவலிமை

**06 சீதாவாக்கை எழுச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?**

1 மாயாதுன்னையினதும் அவன் மகன் டிக்கிரிபண்டாரவினதும் வீரம்.

2 கிறிஸ்தவ சமயப்பிரசாரத்திற்க புவனேகபாகு போர்த்துக்கேயருக்கு அனுமதி வழங்கியமை.

3 1538இல் றைகம இறக்க அப்பிரதேசம் சீதாவக்கைப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டது.

4 1562இல் போர்த்துக்கேயப்படைக்கும் சீதாவாக்கைப்படைக்கும்ட இடையே முல்லேரியா எனுமிடத்தில் போரில் போர்த்துக்கேயர் தோல்வியடைந்தமை.

5 1582இல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டது.

**07 சீதாவாக்கை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?**

1 போர்த்துக்கேயரிடம் துப்பாக்கி, பீரங்கி முதலிய நவீன ஆயுதங்கள் இருந்தன.

2 சீதாவாக்கை மன்னர்களிடம் கடற்படை இல்லாமை.

3 சீதாவாக்கை மன்னன் 1ம் இராஜசிங்கன் தனது இறுதிக்காலத்தில் இந்து சமயத்திற்கு மாறியமை

4 கண்டியைக் கைப்பற்ற உதவிய வீரசுந்தரபண்டார என்பவனை சந்தேகத்தின் பேரில் கொலை செய்தான்.

5 கண்டி இராச்சியத்தில் 1ம் விமலதர்மசூரியன் ஆட்சிக்கு வந்தமை.

6 1ம் இராஜசிங்கனுக்குப் பின்னர் ஆட்சியுரிமையைக் கோர சரியான உரிமையாளன் இன்மை

**08 போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்ற முடிந்தமைக்கான காரணங்கள் எவை?**

1 அரசுரிமை தொடர்பான மோதல்களால் மக்கள் பிளவுபட்டமை

2 சிறந்த படைபலம் இன்மை

3 இயற்கையரண்கள் இல்லாமை

4 போர்த்துக்கேயருக்கு கோவாவில் இருந்து தொடர்ந்து உதவி கிடைத்தமை

**09 போர்த்துக்கேயர் கண்டி மீது மேற்கொண்ட படையெடுப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக?**

1 தந்துரே போர்

2 பலனப்போர்

3 ரந்தெனிவெலபோர்

4 கன்னொறுவப்போர்

**10 போர்த்துக்கேயரால் கண்டி இராச்சியம் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான காரணங்கள் எவை?**

1 கண்டி அரசர்களின் போர்த் தந்திரங்கள்

2 போர்த்துக்கேயருடன் வந்த கூலிப்படையினர் கண்டிப் படைகளுடன் இணைந்து கொண்டமை

3 மக்களின் ஆதரவு கண்டி மன்னனுக்கு இருந்தமை

4 கண்டி இராச்சியத்தின் இயற்கையமைப்பு

**11 2ம் இராஜசிங்கனுக்கும் வெஸ்டர்வோல்டுக்கும் இடையில் ஒப்பந்தம் இடம்பெற்ற ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் எவை?**

1 போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு கண்டி அரசனுக்கு ஒல்லாந்தர் உதவுதல் வேண்டும்.

2 ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவைப் பொருள்(கறுவா, மிளகு, தேன்மெழுகு), பணம் என்பவற்றின் மூலம் செலுத்த அரசன் உடன்படல்.

3 யானை தவிர்ந்த கண்டி இராச்சியத்தின் ஏனைய வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான ஏகபோக உரிமை ஒல்லாந்தருக்குக் கிடைத்தல்.

4 போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளில் அரசன் விரும்பினால் ஒல்லாந்துப் படைகள் தங்கலாம்.

**12 கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோள்களின் சிறப்பியல்புகள் எவை?**

1 போர் செய்வது செலவை ஏற்படுத்தும் என்பதால் கண்டி இராச்சியத்துடன் இயன்றளவு சமாதானமாகச் செயற்பட்டனர்.

2 கண்டி இராச்சிய மன்னனின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளம் பொருட்டு மன்னனுக்கு பரிசில்களை வழங்கியமை.

3 கண்டி மன்னனுடன் கடிதத்தொடர்பை மேற்கொண்டனர்.

4 உபசம்பதா சடங்கினை நிகழ்த்துவதற்கு பிக்குகளை அழைத்துவர கப்பல்களை கொடுத்து உதவினர்.

**13 உச்ச இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒல்லாந்தர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?**

1 கண்டி அரசன் வேறு வெளிநாட்டவருடன் வர்த்தகத் தொடர்புகொள்வதை கூடியளவு தடைசெய்தனர்.

2 மன்னனுடன் முரண்படும் சந்தர்ப்பத்தில் கண்டி இராச்சியத்திற்கும் கரையோரத்திற்கும் இடையிலான கடவையை மூடி விடுதல்.

3 கரையோரப் பிரதேசங்கள் சிலவற்றில் நெற்செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

4 கறுவா பயிரிடவும் அதனைப் பாதுகாக்கவும் நடவடிக்கையெடுத்தல்

5 தமக்கு லாபம் தரும் கரும்பு, கோப்பி, பருத்தி என்பவற்றை பயிர்செய்ய நடவடிக்கையெடுத்தல்.

**14 ஒல்லாந்தருக்கும் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கும் இடையில் ஒப்பந்தம் இடம்பெற்ற உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் எவை?**

1 கொழும்பு, மாத்தறை, காலி, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்கள் ஒல்லாந்தருக்குச் சொந்தம்.

2 கடற்கரையிலிருந்து 4 மைல் தூரம் ஒல்லாந்தருக்குச் சொந்தம்

3 கண்டி இராச்சியத்தின் கறுவா வர்த்தகம் ஒல்லாந்தருக்கு சொந்தமாக்கப்படல் வேண்டும்.

4 கரையோர உப்பளங்கள் கண்டி இராச்சியத்திற்குச் சொந்தமானவை

**09 1766 உடன்படிக்கையின் விளைவுகள் எவை?**

1 கண்டி இராச்சியம் கரையோரப் பகுதிகளை இழந்தது.

2 கண்டியில் இடம்பெற்ற மரபுரீதியான வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

3 ஒல்லாந்துப் பகுதிகளுக்கிடையே கண்டி இராச்சியம் சிக்குண்டது.

4 இலங்கையில் ஒல்லாந்தரின் கீழிருந்த பகதிகளின் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது.